**தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 சனவரி 24 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன என்னால் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 103.50 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 86.53 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 16.97 மில்லியன் அல்லது 16.40 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| **செலவினம்** | **தேறிய ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| மீண்டெழுபவை | 72.00 | 68.25 | 3.75 | 5.21 |
| மூலதனம் | 31.50 | 18.28 | 13.22 | 41.97 |
| **மொத்தம்** | **103.50** | **86.53** | **16.97** | **16.40** |

(ஆ) ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு பணிகளுக்காக கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினால் ரூபா 11.00 மில்லியன் நிதியேற்பாடு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 10.78 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 0.22 மில்லியன் அல்லது 2.00 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30301 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 3.65 | 3.73 | 2.80 | 3.46 | 25.00 | 11.79 |

## 2.3 பொது வைப்புக்கணக்கு

திணைக்களத்தின் கீழான 02 பொதுவைப்புக் கணக்குகளின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7.76 மில்லியன் ஆகும். விபரங்கள் பின்வருமாறு

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0015/0158/000 | 7.66 |
| 6000/0000/00/0013/0132/000 | 0.10 |
| | **7.76** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

# 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (அ) | கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் கணனி மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

## 3.2 பொது வைப்புக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 571(1) இன் பிரகாரம் ஒவ்வொரு அரையாண்டினதும் இறுதியில் காலாவதியான வைப்புக்கள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், ரூபா 119,480 கூட்டுத்தொகையான காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூலை 24 ஆந் திகதிய மற்றும் 243/2015 ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்றறிக்கையின் 5.3 மற்றும் 5.4 பந்திகளில் நானாவித வைப்புக்கள் தொடர்பில் செயற்பட வேண்டிய முறைமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், திணைக்களத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

30301 ஆம் விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 110,220 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 08 முதல் 12 வருடங்கள் வரையான காலவீச்சில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய மற்றும் 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக மூன்று வருட மத்தியக்கால பாதீட்டு வரையறையினுள் குறித்த நிதியாண்டிற்குரிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியின் விபரங்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஆகியன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (ஆ),(இ),(உ) மற்றும் 4.2.2 (அ) வழிகாட்டலின் பிரகாரம், கொள்வனவு நிறுவனத்தினால் ஆகக் குறைந்தது 03 வருட காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு எதிர்வரும் ஆண்டிற்கான கொள்வனவு நடவடிக்கைகள் விரிவாக தயாரிக்கப்பட வேண்டும். அதன் கால அட்டவணை 06 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியினுள் நாளதுவரையாக்கப்பட வேண்டியதுடன் பெறுகைகள் கால அட்டவணைகளும் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் திணைக்களத்தினால் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தால் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் அண்டிற்கு உரிய அந்த அறிக்கை 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைப்பயன்பாடுடன் காணப்பட்டதாக கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

(i) கடந்த வருடங்களினைப் போன்று மீளாய்வாண்டின் போதும் கஹவத்தயில் அமைந்துள்ள ஹிரமடகம மற்றும் நுவரெலியாவில் அமைந்துள்ள ஷாந்திபுர ஆகிய நெசவுக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைகள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன.

(ii) திணைக்களத்திற்குரிய வாகனமொன்று 2013 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், மற்றுமொரு வாகனம் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 01 வருடத்திற்கு குறைந்த காலமாக முன்கொண்டு வரப்படுகின்ற தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 432,887 ஆகும்.

## 3.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| | நிதிப்பிரமாணம் 1646 | திணைக்களத்திற்குச் சொந்தமான குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | **பொது நிதிச் சுற்றறிக்கை** | |
| | 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தி | 2004 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் கொள்வனவு செய்த சொத்துக்கள் தொடர்பான விபரங்களடங்கிய அறிக்கையொன்று அரையாண்டிற்கு ஒரு தடவை அரச நிதி திணைக்களத்திற்கான பிரதியொன்றுடன் அரச நிதிச் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பிலான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

### (அ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

திணைக்களத்தின் நோக்கங்களுக்கு முரணாக பணியொன்றிற்காக செய்திப்பத்திரிக்கை அறிவித்தலொன்றை பிரசுரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 252,000 செலவிடப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதாக பணிப்பாளரால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன..

(i) கைத்தறி நெசவுக் கைத்தொழில் தொடர்பான பூரண அறிவினையும், பயிற்சியையும் வழங்குவதற்கும் கைத்தொழில் துறைக்கு தேவையான முகாமையாளர்கள், மதியுரையாளர்கள் மற்றும் முயற்சியாளர்களையும் உருவாக்கும் நோக்கில் நாடெங்கிலும் பல்வேறு பிரதேசங்களில் நெசவுக் கைத்தொழில் பயிற்சி பாடசாலைகள் நிறுவப்பட்டு வருடாந்தம் மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2014 யூலை 01 ஆந் திகதி முதல் 2015 யூலை 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய ஒரு வருட நெசவுக் கைத்தொழில் பயிற்சி பாடநெறியொன்றிற்காக 200 மாணவர்களை இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக 180 மாணவர்கள் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களின் அளவானது 84 சதவீதமாக இருந்தது.

(ii) நாட்டின் தனித்துவம் மற்றும் கலாச்சாரத்திற்கு பொருந்தும் வகையிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளின் நடவடிக்கைகளை வெற்றிக்கொள்ள கூடிய வகையில் கைத்தறி நெசவுக் கைத்தொழில் துறையின் ஆக்கபூர்வமான மற்றும் போட்டித்தன்மையான புடவை உற்பத்தியில் உற்பத்தியாளர்களை ஈடுபடுத்தும் நோக்கில் வடிவமைப்பாளர்களை பயிற்சியளிப்பதற்காக ஒரு வருட தங்குமிட வசதியுடனான வடிவமைப்பு பயிற்சி பாடநெறியொன்று, கெட்டம்பே மற்றும் கட்டுபெத்த பயிற்சி பாடசாலைகள் மூலம் நடாத்தப்பட்டிருந்தது. 2015 சனவரி 12 ஆந் திகதி முதல் 2016 சனவரி 11 ஆந் திகதி வரையான கல்வியாண்டிற்காக 100 மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 22 பேர் மாத்திரமேயாவதுடன், அவற்றுள் 14 மாணவர்கள் மாத்திரம் பாடநெறியை நிறைவு செய்திருந்தனர். அது இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 64 சதவீதமானதாகும்.

(iii) நெசவுக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளில் 2014/2015 மற்றும் 2015/2016 கல்வியாண்டுகளுக்காக 341 மாணவர்களும், நிர்மாண வடிவமைப்பு பயிற்சி பாடசாலைகளுக்கு 2015/2016 கல்வியாண்டிற்காக 22 மாணவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். எனினும், மேற்படி மாணவர்களுக்காக ஒரு

ஆளுகை விருத்தி செயற்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 28 மாணவர்கள் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(iv) நெசவுக் கைத்தொழில் முயற்சியாளர்களின் விற்பனை மேம்படுத்தல் நோக்கில் ரூபா 5,315,772 செலவிடப்பட்டு தேசிய கைத்தறி புடவைகளின் கண்காட்சியொன்று நடாத்தப்பட்டிருந்தது. அவற்றுள் 80 முயற்சியாளர்களுக்கு சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 46 முயற்சியாளர்களுக்காக மாத்திரம் சந்தைப்படுத்தல் வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(v) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களை மேம்படுத்துவதற்காக ரூபா 2,095,400 செலவிடப்பட்டு மூன்று நாட்களாக நடாத்தப்பட்ட விற்பனைக் கண்காட்சிக் கூடத்திற்கு 25 முயற்சியாளர்கள் மாத்திரம் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்கியிருந்தனர்.

**(இ) திட்டமிடல்**

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்டிருந்த பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) வினைதிறனை அதிகரிப்பதற்காக சேவையிலிருக்கும் போதான பயிற்சியின் கீழ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்காக திறன்கள் அபிவிருத்தி செயலமர்வுகளை நடாத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நெசவுப் பாடசாலைகளுக்காக மாணவர்களை இணைத்துக்கொள்வதை மேம்படுத்தும் நோக்கில் மேம்படுத்தல் நடவடிக்கைகளின் கீழ் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த நெசவு மீள் கட்டமைக்கும் செயற்திட்டம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.8 வங்கிக் கணக்குகளை செயற்பாடுத்துவதிலான குறைபாடுகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை தயாரிப்பதிலான நீண்ட கால தாமதங்கள்**

நிதிப்பிரமாணம் 395(இ) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் தன்மை தொடர்பில் அடுத்துவரும் மாதத்தில் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி கணக்கிணக்கக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது வங்கி இணக்கக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு 11 நாட்கள் முதல் 150 நாட்கள் வரையான நீண்டகால வீச்சிலான தாமதம் ஏற்பட்டிருந்தது.

**(ஆ) காலாவதியான காசோலைகள்**

---

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 06 மாதங்களை கடந்த வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 118,071 தொகையான காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**(அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டியின் நடைமுறையிலிருந்து விலகுதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) கட்டிடங்களை புனரமைத்தல் மற்றும் நிலத்திற்கு கம்பளம் விரித்து அறைகளை ஒதுக்குதல்**

---

திணைக்களம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டிருந்த ஓய்வூதிய திணைக்களத்தின் 3 ஆவது தளத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 3,272,350 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2 (அ), (ஆ) மற்றும் 4.2.3 ஆம் வழிகாட்டில்களுக்கமைய கொள்வனவு ஆரம்பம் முதல் இறுதி வரையிலும் படிமுறைகளைக் குறிப்பிட்டு கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.2(இ) வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை உள்ளடங்கிய விலைக்கேள்வி பதிவேடுகளை வரைபாக்குதல், மீளாய்வு மற்றும் அங்கீகரித்தல் போன்றவற்றிற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு சமர்ப்பித்திருக்காததுடன், சில நிர்மாணங்கள் முறையாக திட்டமிட்டு தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- இந்த ஒப்பந்தத்திற்குரிய வகையில் கூரைதகடுகளை பொருத்துதல், மலசலக்கூட கட்டமைப்பினை புதிதாக நிர்மாணித்தல் மற்றும் சிறு அறைகளை ஒதுக்குதல் தொடர்பான திட்டங்கள் தயாரித்து தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், அவ்வப்போது அந்த பணிகள் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

- அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.3 வழிகாட்டலின் பிரகாரம் விலைக்கேள்வியாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிவுரைகளில் அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக விலைக்கேள்விகள் திறக்கப்பட்டதன் பின்னர் விலைக்கேள்வியாளர்களின் அனுபவம் விசாரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கட்டிடங்களை பழுதுபார்க்கும் ஒப்பந்தத்திற்காக ஆகக் குறைந்த விலைக் கேள்வியினை சமர்ப்பித்த நிறுவனத்தின் முன் வேலைகள்

தொடர்பான தகவல்கள் இல்லையென அறிவித்து விலைக்கேள்வி மறுக்கப்பட்டிருந்தது. இதனால் முதலாவது ஆகக்குறைந்த விலையினை விட ரூபா 146,300 தொகையான இரண்டாவது ஆகக் குறைந்த விலைக்குறிப்பிடப்பட்டிருந்த விலைக் கேள்வியினை சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

- தரையில் கம்பளமிட்டு அறைகளை ஒதுக்குதல் தொடர்பான ஒப்பந்தத்திற்காக கொலன்னாவையிலுள்ள அரச கைத்தொழிற்சாலையால் ரூபா 1,289,800 தொகையான விலைக்கேள்வியொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டதாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ii) கைத்தரி இயந்திரங்கள் மற்றும் வயின்டிங் இயந்திரங்களை கொள்வனவு செய்தல்**

---

மாத்தளை கைத்தரி இயந்திர செயற்திட்டம் மற்றும் திணைக்களத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 60" ரக கைத்தரி இயந்திரங்கள் 245 மற்றும் 225 வயின்டின் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 14,324,687 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2014 யூன் 20 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த கொள்வனவு நடைமுறையின் இறுதி இயந்திர இருப்பானது 20 மாத தாமதத்தின் பின்னர் 2016 மார்ச் 24 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது.

- 60" ரக 245 கைத்தரி இயந்திரங்கள் மற்றும் 225 வயின்டிங் இயந்திரங்களையும் கொள்வனவு செய்வதற்காக 2014 நவம்பர் 19 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் பொருட்கள் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், இயந்திரங்களை விநியோகிப்பதற்கு 2015 ஆகஸ்ட் 25 ஆந் திகதி முதல் 2016 மார்ச் 24 ஆந் திகதி வரையான காலப்பகுதி எடுக்கப்பட்டிருந்தது.

- பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.10 (இ) வழிகாட்டலின் பிரகாரம் பொருட்களுக்கான மதிப்பிடப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீதத்திற்கும் குறையாக செயலாற்றல் பிணையொன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும், 5 சதவீதமான செயலாற்றல் பிணையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

- இந்த இயந்திரங்களில் மாத்தளை கைத்தறி நெசவு செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட 175 எண்ணிக்கையான கைத்தரி இயந்திரங்களில் 50 மற்றும் 150 வயின்டிங் இயந்திரங்களில் 50 மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், மேற்படி செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமையால் மிகுதி இயந்திரங்களை பகிர்ந்தளிக்க முடியாது போயிருந்தது.

- கொள்வனவு செய்யப்பட்ட 245 கைத்தறி இயந்திரங்கள் மற்றும் 225 வயின்டிங் இயந்திரங்களில் 2016 யூன் 28 ஆந் திகதி வரையிலும் 130

கைத்தறி இயந்திரங்களும் 136 வயின்டிங் இயந்திரங்களும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன.

**(iii) தலாவ பயிற்சி நிலையத்தின் 02 கட்டிடங்களை புதுப்பித்தல்**

தலாவ பயிற்சி நிலையத்தின் 02 கட்டிடங்களை புதுப்பிப்பதற்காக ரூபா 1,728,425 தொகை ஆண்டினுள் செலுத்தப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3.2(இ) வழிகாட்டலின் பிரகாரம் அமைப்புக்குறிப்பீடுகளுட்பட வரைபு விலைக்கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல், அவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரிப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு சமர்ப்பித்தல் ஆகியன பெறுகைகள் நிறுவனத்தின் பொறுப்பு என்பது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மேற்படி கொள்வனவுகளுக்காக 2015 ஆகஸ்ட் 07 ஆந் திகதி விலைக்கேள்வி திறக்கப்பட்டிருந்ததுடன், அதன் பின்னர் 2015 செப்தம்பர் 02 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

- இந்த பழுதுபார்த்தல் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கை 2015 ஒக்தோபர் 06 ஆந் திகதி கிடைத்திருந்தது. அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.4.1 வழிகாட்டலுக்கமைய விலைக்கேள்வி மதிப்பீடு செய்முறை கூடிய விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை விலைக்கேள்வி திறக்கப்பட்ட திகதியிலிருந்து 02 மாதகால தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

- உரிய ஒப்பந்தத்தை கையளிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த நிர்மாண நிறுவனங்கள், ICTAD நிறுவனத்தில் 2010 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த நிறுவனத்தின் பூர்வாங்க வேலைகள் தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கையில் இந்த ஒப்பந்தாரரை தெரிவு செய்தல் தொடர்பில் சாதாரணமான காரணங்கள் குறிப்பாக தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

(அ) வடபுலுவ நெசவுப் பாடசாலையில் இடம்பெற்றிருந்த உள்ளக நீர்க்கசிவினை வெளிப்படுத்தி அதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் விரயமாகிய நீருக்காக ரூபா 124,179 தொகை நீர்ப் பட்டியல்களுக்காக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1992 ஆம் ஆண்டில் இடம்பெற்ற களவொன்று தொடர்பில் பாதுகாப்பு நிறுவனம் பொறுப்புக்கூற வேண்டும் எனக் குறிப்பிட்டு 1992 நவம்பர் மாதம் முதல் அந்த நிறுவனத்திற்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டிருந்தன. அந்த தீர்மானத்திற்கு எதிராக பாதுகாப்பு நிறுவனத்தால் தொடுக்கப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பிற்கமைய ரூபா 823,570 தொகையான நாளாந்த வட்டியுடன் ரூபா 1,476,770 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

**3.11 முகாமைத்துவ நலிவுகள்**

----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்கு சொந்தமாக நெசவுக் கைத்தொழில் முயற்சிகள் தனியார் துறைக்கு நீண்டகால அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1995 யூலை 21 ஆந் திகதிய எஸ்ஈஜ/ஏ/4/34 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தினால் அரச காணிகளை சுவீகரித்தல் தொடர்பான வழிகாட்டல் எனும் பெயரில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- சுற்றறிக்கையின் 8(அ) பந்தியின் பிரகாரம் மீள்திருத்தப்பட்ட தொகை முதலில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் 150 சதவீதத்திற்கு குறையாத வகையில் 5 வருடங்களுக்கு ஒரு முறை குத்தகை வாடகை காலத்திற்கு காலம் மீளமைக்கப்பட்டிருக்கவில்லை.

- சுற்றறிக்கையின் 8(ஈ) பந்தியின் பிரகாரம் குத்தகை வாடகையினை செலுத்துவதை புறக்கணிக்கின்றமையால் குத்தகை ஒப்பந்தமான தானாக இரத்துச் செய்யப்படுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், யட்டிநுவர, தலாதுஓய மற்றும் உடுநுவர நெசவுத் தொழிற்சாலைகள் தொடர்பில் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

- 9 ஆவது பந்தியின் பிரகாரம் குத்தகையாளரால் குத்தகை ஒப்பந்தம் உரிய முறையில் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், நிலுவை பணத்தினை சேர்வதற்கு இடமளிக்காமல் குத்தகை வாடகையினை சேகரிக்க வேண்டும். எனினும், ஹிங்குரன்கொட, பிபில, யட்டிநுவர, தலாதுஓய மற்றும் உடுநுவர நெசவுக் கைத்தொழிற்சாலைகள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பண்டாரவல உந்துசக்தி நெசவுக் கைத்தொழில் முயற்சிக்கு சொந்தமான பிபில, பஸ்ஸர நெசவுக் கைத்தொழிற்சாலைகளை விற்பனை செய்தமையுடன் தொடர்புடைய உதிரிப்பாகங்களுக்கான பணத்தை அறவிடுவதற்கு வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. அந்த வழக்கின் தீர்ப்பானது 2001 யூலை 23 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. அந்த தீர்ப்பின் பிரகாரம் வட்டியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 845,268 தொகை அத் திகதி முதல் 03 வருட காலப்பகுதியினுள் அறவிடப்பட வேண்டிய போதிலும், அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பிபில நிம்ஹம் நிறுவனம் 1996 சனவரி 01 ஆந் திகதி முதல் ரூபா 150,000 தொகையான வருடாந்த குத்தகை தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் 2011 ஆகஸ்ட் 04 ஆந் திகதி காணி மற்றும் கட்டிடம் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன், அத் திகதியே பிரதேச செயலாளருக்கு அந்த ஆதனங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. குத்தகையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,681,250 தொகையான

குத்தகை தொகையினை அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) 1993 சனவரி 31 ஆந் திகதி ரூபா 108,000 தொகையான வருடாந்த குத்தகைக்கு அமைய ஹிங்குரக்கொட உந்துசக்தி நெசவுக் கைத்தொழிற்சாலை அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகையாளரால் குத்தகை கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்டமையால் 2001 பெப்ரவரி 12 ஆந் திகதி பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. குறித்த ஒப்பந்ததாரரிடம் திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக இருந்த ரூபா 529,600 தொகையான நிலுவை குத்தகை தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) குருவிட்ட உந்துசக்தி நெசவுக் கைத்தொழிற்சாலையின் கொள்வனவாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு சபை வழக்கொன்றை தொடுத்திருந்தது. இந்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் உதிரிப்பாகங்களுக்காக மற்றும் தண்டப்பண வட்டியாக ரூபா 1,355,079 அறவிடப்பட வேண்டியிருந்தது. அவற்றுள் ரூபா 225,846 தொகை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த பணத்தை அறவிடுவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) யட்டிநுவர உந்துசக்தி நெசவுக் கைத்தொழில் கூடம் 1995 யூலை 14 ஆந் திகதி முப்பது வருட குத்தகையின் அடிப்படையில் ரூபா 212,000 தொகையான வருடாந்த குத்தகை தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த காணியின் ஒரு பகுதியில் அத்துமீறிய குடியிருப்பாளர் ஒருவர் வசித்து வருவதுடன், அந்த சிக்கலைத் தீர்த்து காணியை விடுவித்து சுமுகமான உரித்தினை ஒப்பந்ததாரருக்கு கையளிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக குத்தகைக்கு வழங்கிய திகதியிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 2,756,000 தொகையான குத்தகை பணத்தை அறவிடமுடியாது போயிருந்தது. அந்த நிலுவை குத்தகை பணம் அல்லாது 2013 ஆம் ஆண்டு முதல் வருடமொன்றிற்கு ரூபா 212,000 படியான குத்தகைப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(vii) தலாது ஓய உந்துசக்தி நெசவுக் கைத்தொழிற்சாலை 2000 திசெம்பர் 01 ஆந் திகதி ரூபா 148,000 தொகையான வருடாந்த குத்தகை தொகைக்கு முப்பது வருட குத்தகை அடிப்படையில் குத்தகையளிக்கப்பட்டிருந்தது. குத்தகையாளரால் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 2000 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையும் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையுமான 08 வருடக் காலப்பகுதிக்காக மாத்திரம் ரூபா 1,184,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், எஞ்சிய ரூபா 1,036,000 தொகையான குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(viii) உடுநுவர உந்துசக்தி நெசவுக் கைத்தொழிற்சாலை 2000 பெப்ரவரி 01 ஆந் திகதி ரூபா 216,000 தொகையான வருடாந்த குத்தகை தொகைக்கு முப்பது வருட குத்தகையின் அடிப்படையில் குத்தகையளிக்கப்பட்டிருந்தது. குத்தகையாளரால் இந்த இடத்தில் வியாபார நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன், 2015 பெப்ரவரி 01 ஆந் திகதியளவில் குத்தகையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,240,000 தொகையான குத்தகை தொகையினை அறவிட முடியாது போயிருந்தது.

(ix) களுத்துறை உந்துசக்தி வியாபாரத்தின் இயந்திராதிகள் மற்றும் உதிரிப்பாகங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,694,443 தொகையை அறவிடுவதற்கு வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. 1992 ஏப்ரல் 22 ஆந் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் அந்த தொகை 36 தவணைகளில் செலுத்தி முடிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,991,962 தொகை நிலுவையாக இருந்ததுடன், அதனை அறவிடுவதற்கு சட்டமா அதிபரின் அறிவுரை வினவப்பட்டிருந்தது. நிலுவைப் பணத்தின் இறுதி தவணைப்பணம் 1999 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளமையால் வழக்கினை தொடருவதற்காக சிவில் வழக்கு கட்டளைக் கோவையின் 337(1) ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த பணத்தை அறவிடுவதற்கான காலம் கடந்திருந்தமையால் அதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் இல்லையென சட்டமா அதிபர் குறிப்பிட்டிருந்தார்.

(x) 2010 ஆகஸ்ட் 05 ஆந் திகதி நிதி அமைச்சினால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த வாகனமொன்று திணைக்களத்தின் பெயருக்கு மாற்றப்பட்டிருக்காததுடன் அந்த வாகனத்தின் பழுதுபார்த்தல்களுக்காக 2012 ஆம் ஆண்டு முதல் ரூபா 999,425 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆகஸ்ட் 05 ஆந் திகதி நிதி அமைச்சினால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த 64-3210 இலக்கம் கொண்ட வாகனம் திணைக்களத்தின் பெயருக்கு சட்டரீதியாக மாற்றப்பட்டிராததுடன், இதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 996,425 செலவிடப்பட்டிருந்தது.

(இ) மாத்தளை மாவட்டத்தின் நெசவுக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சின் நிதியேற்பாடுகளிலிருந்து 175 கைத்தறி இயந்திரங்கள் மற்றும் 150 வயின்டிங் இயந்திரங்கள் கொள்னவவு செய்யப்பட்டிருந்த போதிலும், 02 பிரதேச செயலகங்களுக்கு 50 கைத்தறி இயந்திரங்கள் மற்றும் வயின்டிங் இயந்திரங்கள் வீதம் வழங்கப்பட்டமை மாத்திரம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இடம்பெற்றிருந்தது.

**3.13 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | 04 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 109 | 93 | 16 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 42 | 20 | 22 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 05 | - | 05 |
| | **மொத்தம்** | **157** | **122** | **40** | **05** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் பெண் நெசவு மதியுரையாளர்கள் மூவர் உரிய பதவிக்குரிய பணிகளுக்கு புறம்பாக ஏனைய பணிகளுக்காக தலைமை அலுவலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளராக சேவையாற்றியவாறு இருந்த உத்தியோகத்தரொருவர் 2011 சனவரி 10 ஆந் திகதி முதல் திணைக்களத்தின் தென் மாகாணத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தராக காலி பிரதேச செயலகத்திற்கு இணைப்பு செய்யப்பட்டிருந்தார்.